கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 144 | 29-11-2025 | சனி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 144 | 29-11-2025 | Saturday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## நாட்டின் முதல் தனியார் நிறுவன ராக்கெட் விக்ரம் 1-ஐ அறிமுகம் செய்து வைத்தார் பிரதமர் மோடி



ஹைதராபாத்: நவ.29–

ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனத்தின் விக்ரம் 1 ராக்கெட்டை பிரதமர் மோடி நேற்று அறிமுகம் செய்தார். அதோடு ஹைதராபாத்தில் ஸ்கைரூட் நிறுவனத்தின் இன்ஃபினிட்டி வளாகத்தையும் பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

இஸ்ரோ நிறுவனத்தின் முன்னாள் விஞ்ஞானிகள் மற்றும் ஐஐடி முன்னாள் மாணவர்களால் உருவாக்கப்பட்ட நிறுவனம் ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ். இது நாட்டின் முதல் தனியார் விண்வெளி நிறுவனம். இந்நிறுவனம் தயாரித்த விக்ரம்எஸ் என்ற சிறிய ரக ராக்கெட் கடந்த 2022 நவம்பர் மாதம் வெற்றிகரமாக ஏவப்பட்டது. இந்நிறுவனம் தற்போது செயற்கைக்கோள்களை புவியின் சுற்றுவட்ட பாதையில் நிலை நிறுத்த கூடிய ராக்கெட்டுகளை வர்த்தக ரீதியில் அனுப்ப தயாராகியுள்ளது. இந்நிறுவனம் ஹைதராபாத்தில் 2 லட்சம் சதுர அடியில் மிகப் பெரிய வளாகத்தை அமைத்துள்ளது.

இன்ஃபினிட்டி என்ற பெயரில் தொடங்கப்பட்ட இந்த வளாகத்தை நேற்று காணொளி மூலம் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். அதோடு ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனம் தயாரித்த விக்ரம் 1 என்ற ராக்கெட்டையும் பிரதமர் மோடி அறிமுகம் செய்தார். இந்த வளாகம் மாதத்துக்கு ஒரு ராக்கெட்டை உருவாக்கும் திறன் படைத்தது என அதன் நிறுவனர் பவன் சந்தனா கூறியுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது: உலகளவில் செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவுவதில் இந்தியா முன்னணி நாடாக உருவெடுக்கவுள்ளது. நாட்டின் முதல் தனியார் நிறுவனம் விக்ரம் 1 ராக்கெட்டை உருவாக்கி சாதனை படைத்திருப்பது நாட்டின் நம்பகத்தன்மை மற்றும் புதுமை கண்டுபிடிப்பின் அடையாளமாக உள்ளது. விண்வெளித்துறையின் நம்பகத்தன்மை, திறன், மதிப்பு ஆகியவற்றில் இந்தியா தனி அடையாளத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனர்கள் பவன் சந்தனா மற்றும் பாரத் டாகா ஆகியோர் நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு மிகப் பெரிய ஊக்குவிப்பாளர்களாக உள்ளனர். விண்வெளித் துறையில் ஸ்கைரூட் போன்ற நிறுவனங்கள் முன்னணியில் இருப்பது, இத்துறையில் தனியார் நிறுவனங்களை வளர்க்க அரசு மேற்கொண்ட சீர்திருத்தங்களுக்கு நேரடி சான்றாக உள்ளது.

தற்போது விண்வெளித்துறையில் 300க்கும் மேற்பட்ட ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் உருவாகியுள்ளன. புதுமை கண்டுபிடிப்புகள் சிறு நகரங்கள் மற்றும் கிராமங்களுக்கும் பரவியுள்ளது. ஸ்டார்ட் அப் நிறுவனங்களை மட்டும் அல்லாது செமி கண்டக்டர் ஆலைகள் , டிசைன் மையங்களும் இந்தியாவில் உருவாகி வருகின்றன.

அணு சக்தி துறையையும் தனியார் நிறுவனங்களுக்கு திறந்து விடும் திட்டங்கள் மத்திய அரசிடம் உள்ளன. விண்வெளித் துறையில் 5 பெரிய நிறுவனங்கள் விரைவில் உருவாக உள்ளன. ராக்கெட் ஏவு திறனை மேம்படுத்தி, 21ம் நூற்றாண்டை இந்தியாவின் நூற்றாண்டாக ஆக்குவதுதான் லட்சியம். இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

## டித்வா' புயல் எச்சரிக்கை: திமுக நிர்வாகிகள் தயார் நிலையில் இருக்க முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தல்!




சென்னை: நவ.29–

காஞ்சிபுரம், திருவள்ளூர், தஞ்சை உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த திமுக நிர்வாகிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ‘டித்வா’ புயல் காரணமாக கனமழையை எதிர்கொண்டு மக்களுக்கு உதவிட தயார் நிலையில் இருக்க வேண்டும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ள கடந்த இரண்டு நாட்களாக பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகளுடன் பல்வேறு ஆய்வுக் கூட்டங்களை நடத்தி வந்த நிலையில் ‘டித்வா’ புயல் எதிர்கொள்ள அரசின் சார்பில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அரசு இயந்திரத்தை முடுக்கி விட்டுள்ளதோடு, மாவட்டங்களுக்கான பொறுப்பு அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்டோருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் உரிய அறிவுரைகளும் வழிகாட்டுதல் களும் வழங்கப்பட்டுள்ளன.

மழையை எதிர்கொள்ள அரசாங்கம் முழு அளவில் தயாராக உள்ளது என்றாலும், ஒருவேளை இயற்கை வழக்கத்திற்கு மாறாகப் பெருமழைப்பொழிவை ஏற்படுத்தினாலும் சரியான முன்னெச்சரிக்கையுடன் பதற்றமில்லாமல் மழைக் காலத்தை எதிர்கொள்வோம். பாதிக்கப்படும் மக்களுக்கு உதவிடும் வகையில் கழகமும் களத்தில் துணையாக நிற்க வேண்டும் என கழக உடன்பிறப்புகள் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட மற்றும் கிளைக் கழகச் செயலாளர்களைத் தயார் நிலையில் இருக்கும்படி காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை, வேலூர், ராணிப் பேட்டை, திருவண்ணாமலை, தஞ்சை, நாகை,திருவாரூர்,புதுக்கோட்டை, மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் அறிவுறுத்த வேண்டும். கவுன்சிலர்கள் தங்கள் வார்டுகளிலேயே முழுமையாக இருந்து மக்களுக்கு உதவிட வேண்டும்.

மழைக்காலத்தில் கழகத்தினர், பொதுமக்கள் தன்னார்வலர்களுடன் இணைந்து பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களான அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட பொருட்களை வாங்கித் தருவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து வைத்துக் கொள்வது அவசியம். குடிநீர், பால் ஆகிய இரண்டும் மிக அவசியமான தேவையாக இருக்கும். எனவே தங்கள் பகுதிகளில் அவை தடையின்றிக் கிடைக்கின்றனவா என்பதைக் கண்காணித்து, தேவையான ஏற்பாடுகளைச் செய்து தரவும், ஆங்காங்கே நடைபெறும் மீட்பு பணிகளிலும் உதவிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

மழைக்காலத்தை எதிர்கொள்ளவும் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவிடும் வகையிலும் கழகம் களத்தில் முழுமூச்சுடன் துணையாக நிற்க வேண்டும் என கட்சியினரை, நிர்வாகிகளையும் கேட்டுக் கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

## புதுச்சேரிக்கு ரெட் அலர்ட்: 60 பேர் கொண்ட இரண்டு தேசிய பேரிடர் மீட்புக்குழு வருகை!

புதுச்சேரி: நவ.29–

தென்மேற்கு வங்கக்கடலில் உருவாகியுள்ள டித்வா புயல் காரணமாக புதுச்சேரிக்கு நாளை ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. அதையொட்டி இரண்டு தேசிய பேரிடர் மீட்புக்குழு புதுச்சேரி வந்தது.

தென்மேற்கு வங்கக்கடலில் டித்வா புயல் உருவாகியுள்ளது. இந்த புயல் புதுச்சேரியை நோக்கி நகரும் என்றும் இதனால் கனமழைக்கு வாய்ப்புள்ளது என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. புதுச்சேரிக்கு நாளை ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தேசிய பேரிடர் மீட்புக்குழு அரக்கோணத்திலிருந்து புதுச்சேரிக்கு வந்துள்ளது. இக்குழுவை பார்வையிட்ட ஆட்சியர் குலோத்துங்கன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்திய வானிலை ஆய்வு மையம் புதுச்சேரிக்கு நாளை ரெட் அலர்ட் விடுத்துள்ளது. அதிக மழைப் பொழிவு இருக்கும் என்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்துள்ளோம். 60 பேர் கொண்ட இரண்டு தேசிய பேரிடர் மீட்புக்குழு வந்துள்ளது.

24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறை உள்ளது. 112, 1070, 1077 கட்டணமில்லா தொலைபேசி மூலம் மக்கள் புகார்கள் தெரிவிக்கலாம். கடந்த மழையில் தண்ணீர் தேங்கிய 70 இடங்களில் பொதுப்பணித்துறை உள்ளாட்சித்துறை மூலம் தற்காலிக மோட்டார் பம்புகள் தண்ணீரை வெளியேற்ற வைத்துள்ளோம். ஜேசிபிகளை 46 இடங்களில் தயாராக வைத்துள்ளோம். மக்கள் தங்க 312 இடங்களில் இடங்கள் வைத்துள்ளோம். மக்களுக்கு உணவு தர ஏற்பாடு செய்துள்ளோம்.

அவசரகாலத்தில் உடன் உதவும் குழு 16 அமைத்துள்ளோம். இக்குழுவில் வருவாய்துறை, போலீஸ் உள்பட பல்வேறு துறையினர் இடம் பெற்றுள்ளனர். யாரும் மழையில் தேவையில்லாமல் வெளியே வரவேண்டாம் என மக்களுக்கு கோரியுள்ளோம். இடி, மின்னல் சமயங்களில் பாதுகாப்பாக இருக்கவேண்டும். அத்தியாவசியப் பொருட்களான ரொட்டி, பால், பிரட் போன்ற பொருட்களை இன்றே வாங்கிக் கொள்ளுங்கள்.” என்றார்.

## ”ஸ்டிரைக் வாபஸ்..! மீண்டும் தொடங்கியது ஆம்னி பேருந்து சேவை ,

“சாலை வரி பிரச்சனை தொடர்பாக ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தினர் வேலை நிறுத்தம் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.இந்நிலையில், 18 நாட்களுக்கு பிறகு மாநிலங்களுக்கு இடையிலான ஆம்னி பேருந்து சேவைகள் மீண்டும் தொடங்கியுள்ளது

.போக்குவரத்துத்துறை அமைச்சர் உறுதிமொழியை அடுத்து ஸ்டிரைக் வாபஸ் பெற்றுள்ளதாக ஆம்னி பேருந்து சங்கம் தெரிவித்துள்ளது.மேலும், சபரிமலைக்கு செல்லும் அய்யப்ப பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு மீண்டும் பேருந்து சேவை தொடங்கியுள்ளது. “,

## புயல் காரணமாக எல்லா மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள் முழுநேரம் பணியில் இருக்க அறிவுறுத்தியிருக்கிறோம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி



சென்னை: நவ.29–

புயல் காரணமாக எல்லா மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள் முழுநேரம் பணியில் இருக்க அறிவுறுத்தி யிருக்கிறோம் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி அளித்துள்ளார்.

தென்சென்னை மாவட்டத்தில்,சமூக நலத்துறையின் சார்பில்,திறன் பயிற்சி (அழகுகலை) முடித்த 10 திருநங்கைகளுக்கு பயிற்சி சான்றிதழ் மற்றும் தலா ரூ. 50,000 மானியம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டார். பின்னர், அழகுகலை முடித்த 10 திருநங்கைகளுக்கு பயிற்சி சான்றிதழ் மற்றும் தலா ரூ. 50,000 மானியம் வழங்கினார்.

இதை தொடர்ந்து, செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர், சுகாதாரத்துறையில் ஒரு காலிப் பணியிடமாவது எங்கேயாவது இருக்கிறதா என்பதை காட்டுங்கள்; ஜீரோ காலிப்பணியிடங்கள் என்ற வகையில் மருத்துவத்துறையில் பணி நியமனங்கள் செய்யப்பட்டு வருகின்றன 1.75 லட்சம் பேர் பணிபுரியும் மருத்துவத்துறையில் காலிப் பணியிடமே இல்லை என்ற நிலை தற்போதுதான் உள்ளது. எல்லா மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள் முழுநேரம் பணியில் இருக்க அறிவுறுத்தியிருக்கிறோம்.

ஓரிரு பேருக்கு காய்ச்சல் ஏற்பட்டாலே, காய்ச்சல் முகாம்கள் நடத்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது”. மழைத்தொடங்கிய பிறகு ஏதாவது பகுதிகளில் காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டால் உடனடியாக மழைக்கான சிறப்பு மருத்துவ முகாம் அமைக்க அறிவுறுத்தப் பட்டு ள்ளது. அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் முழு நேரம் மின்சாரம் தடைபடாமல் வருவதற்கு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. மழை பெய்தால் மருத்துவமனையில் தண்ணீர் வரும் என்ற நிலை பெரும்பகுதியான மருத்துவமனைகளில் தற்போது இல்லை என தெரிவித்தார்

## டெல்லி காற்று மாசு குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம்: ராகுல் காந்தி வலியுறுத்தல்

புதுடெல்லி: நவ.29–

டெல்லி உள்பட வட மாநிலங்களில் நிலவும் காற்று மாசு குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்று ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “நான் சந்திக்கும் ஒவ்வொரு தாயும் என்னிடம் ஒரே விஷயத்தைச் சொல்கிறார்கள். எனது குழந்தை நச்சுக் காற்றை சுவாசித்து வளர்கிறது, சோர்வடைகிறது, அச்சம் கொள்கிறது, கோபப்படுகிறது என்பதே அது.

மோடி அவர்களே, இந்தியக் குழந்தைகள் நம் கண் முன்பாக மூச்சுத்திணறுகிறார்கள். நீங்கள் எவ்வாறு அமைதியாக இருக்க முடியும்? உங்கள் அரசாங்கத்திடம் ஏன் எந்த அவசரமும் இல்லை, திட்டமும் இல்லை, பொறுப்புக்கூறல் இல்லை?

காற்று மாசுபாடு குறித்தும், இந்த அவசர நிலையை சமாளிக்க மேற்கொள்ள வேண்டிய கடுமையான செயல் திட்டம் குறித்தும் நாடாளுமன்றத்தில் உடனடியாகவும் விரிவாகவும் விவாதிக்க வேண்டியது அவசியம்.

நமது குழந்தைகளுக்கு சுத்தமான காற்று தேவை. சாக்குப்போக்குகளும் கவனத்தை திசைதிருப்பும் முயற்சிகளும் அல்ல.” என தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் டிச. 1ம் தேதி கூட உள்ள நிலையில் அதில் முன்னெடுக்க வேண்டிய முக்கிய விஷயங்கள் குறித்து விவாதிக்க காங்கிரஸ் நாடாளுமன்ற வியூகக் குழுவின் கூட்டம் காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தியின் டெல்லி இல்லத்தில் நாளை மறுநாள் நடைபெற உள்ளது.

இதனிடையே, காற்று மாசு பிரச்சினை குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் கருத்து தெரிவித்துள்ள டெல்லி முன்னாள் முதல்வரும் ஆம் ஆத்மி கட்சியின் தலைவருமான அரவிந்த் கேஜ்ரிவால், “சுத்தமான காற்றும் சுத்தமான குடிநீரும் ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை உரிமை.


டெல்லி உட்பட வட இந்தியாவில் காற்று ஆபத்தானதாக மாறிவிட்டது. இந்த விவகாரத்தில் தீர்வுகளை வழங்குவதற்குப் பதிலாக அரசாங்கம், பொதுமக்களிடம் இருந்து வரிகளை வசூலிக்கிறது.

காற்று மாசு பாதிப்பில் இருந்து தங்கள் குடும்பங்களைப் பாதுகாக்க மக்கள் காற்று சுத்திகரிப்பான்களை வாங்கச் செல்கிறார்கள். ஆனால், அரசாங்கம் அதற்கு 18% ஜிஎஸ்டி வரியைப் போட்டு பணம் பண்ணுகிறது. இது முற்றிலும் அநீதி.

காற்று மற்றும் குடிநீரை சுத்திகரிக்கும் இயந்திரங்கள் மீதான ஜிஎஸ்டியை மத்திய அரசு உடனடியாக ரத்து செய்ய வேண்டும். தீர்வுகளை வழங்க முடியாவிட்டாலும், குறைந்தபட்சம் மக்களுக்குபொருளாதார சுமையையாவது ஏற்றாமல் இருங்கள்.” என தெரிவித்துள்ளார்.

இன்று காலை 8 மணி அளவில் டெல்லியில் காற்றின் தரக் குறியீடு 384 ஆக இருந்தது. நேற்று மாலை 4 மணிக்கு இது 377 ஆக இருந்தது. காற்றின் தரக்குறியீடு 0 முதல் 50 வரை இருந்தால் அது சுத்தமான காற்று, 51 முதல் 100 வரை இருந்தால் அது ஏற்றுக்கொள்ளத்தக்க நிலை. 101 முதல் 150 வரை இருந்தால் காற்று மாசு சிலருக்கு உடல்நல பாதிப்பை ஏற்படுத்தும். 151 முதல் 200 வரை இருந்தால் அனைவரின் ஆரோக்கியத்துக்கும் எதிரானது. 201 முதல் 300 வரை எனில் மிகவும் மோசம். 301க்கு மேல் எனில் சுகாதார எச்சரிக்கை நிலை என்பது குறிப்பிடத்தக்கது.

## மூச்சு உள்ள வரை அ.தி.மு.க. தான் ஜெயக்குமார் திட்டவட்டம்



சென்னை: நவ.29–

50 ஆண்டுகள் அரசியல் அனுபவம் கொண்ட செங்கோட்டையன் நேற்று விஜய் முன்னிலையில் தமிழக வெற்றிக்கழகத்தில் இணைந்தார். இதுகுறித்து அரசியல் தலைவர்கள் பலரும் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், புலிக்கு வாலாக இருக்கலாம், எலிக்கு தலையாக இருக்கக்கூடாது என செங்கேட்டையன் த.வெ.க.வில் இணைந்தது குறித்து அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கருத்து தெரிவித்துள்ளார். மேலும் செங் கோட்டை யன் த.வெ.க. வில் இணைந்ததை நினைத்தால் சிரிப்பு தான் வருகிறது. செங்கோட்டையனுக்கு பிறகு நானும் த.வெ.க.வில் இணைவதாக சொல்கின்றனர். மூச்சு உள்ள வரை அ.தி.மு.க.வில் தான் இருப்பேன் என்று ஜெயக்குமார் கூறினார். “,

# உயர் மின் கோபுர விளக்கு துவக்க விழா



திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் சுப்புராயன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் வார்டு எண் 43 55 ஆகிய இரண்டு வார்டுகளில் நான்கு உயர்மின் கோபுர மின்விளக்கு திறப்பு விழாவினை திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் சுப்பராயன் திறந்து வைத்தார் உடன் துணை மேயர் பாலசுப்பிரமணியம் 43 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி சாந்தாமணி. திமுக பகுதிகழக செயலாளர் மியாமி ஐயப்பன். உள்ளிட்ட அரசு அதிகாரிகள் ஊர் பொதுமக்கள் பெரும் திரளாக பங்கேற்றனர்...

# மணப்பாறையில் துணை முதல்வர் பிறந்தநாள் விழா. பொதுமக்களுடன் கொண்டாடிய திமுகவினர்.



திருச்சி மாவட்டம், மணப்பாறையில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினர். பேருந்து நிலையம் அருகே முன்னாள் ஒருங்கிணைந்த மாவட்ட இளைஞரணி துணைச்செயலாளரும் முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினருமான பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாதசாரிகள், வாகனங்களில் செல்பவர்களுக்கும் இனிப்புகள் வழங்கியதுடன் பேருந்தில் பயணம் செய்பவர்களுக்கும் ஓட்டுனர் மற்றும் நடத்துனர்களுக்கும் இனிப்புகள் வழங்கினர். இதில் முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் A.P.சரவணன் உள்ளிட்ட கட்சியினர் திரளாக கலந்து கொண்டனர்.

# நாம் தமிழர் கட்சி சார்பில் பொள்ளாச்சி அரசு தலைமை மருத்துவமனைக்கு குருதி கொடை!!!




பொள்ளாச்சி மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில் பொள்ளாச்சி நாம் தமிழர் கட்சி சார்பாக தமிழ்தேசிய தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நாம் தமிழர் கட்சி சார்பாக குருதிக்கொடை வழங்கப்பட்டது. நிகழ்வில் மாநில ஒருங்கிணைப்பாளர் சுரேஷ் குமார், முன்னாள் மாவட்ட செயலாளர் செந்தில்குமார், முன்னாள் பொள்ளாச்சி தொகுதி செயலாளர் ம.கிருஷ்ணகுமார், குருதிக்கொடை பாசறை மாநில பொறுப்பாளர் சுரேஷ்குமார் மற்றும் பல நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தமிழக வெற்றிக் கழக அலுவலக திறப்பு விழா




தமிழக வெற்றிக்கழக தலைவர் தளபதி விஜய் மற்றும் மாநில பொதுச் செயலாளர் புஸ்ஸி. ஆனந்த் ஆகியோரின் ஆலோசனைப்படி திருப்பூர் மாநகர மாவட்ட நெருப்பெரிச்சல் பகுதி கழக செயலாளர் கோவிந்தராஜ் அவர்களின் தலைமையில் 4வது வார்டு கிளை கழக அலுவலகம் திறப்பு விழாவினை மாநகர மாவட்ட செயலாளர் பாலமுருகன் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார் மேலும் பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கும் விழாவும் நடைபெற்றது உடன் 4வது வார்டு நிர்வாகிகள் மனோகரன் செயலாளர் கார்த்திகேயன் இணை செயலாளர் நவீன் பொருளாளர் வேல்முருகன் துணை செயலாளர் கோபிநாத் துணை செயலாளர் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் பகுதி கழக இணைச் செயலாளர் ராசுக்குட்டி, பகுதி துணைச் செயலாளர் சதீஷ்குமார், பகுதி கழகப் பொருளாளர் சரத்குமார், பகுதி கழகத் துணைச் செயலாளர் புனிதா, பகுதி கழக ஒருங்கிணைப்பாளர் கண்ணன், செயற்கு உறுப்பினர் மணி செமற்றும் பகுதி கழக மகளிர் அணி வெண்ணிலா, வித்யா, சபீனா,சரஸ்வதி, தனலட்சுமி, லலிதா, திவ்யா உள்ளிட்ட மாவட்ட மாநகர பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# வாக்காளர் பட்டியல் திருத்தம் பணி.. பொதுமக்கள் கவனத்துடன் சரிபார்க்க வேண்டும்..

## ஈரோட்டில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் ஆட்சியர்ச. கந்தசாமி அறிவுறுத்தல்..

ஈரோடு. நவ. 29

நடைபெற்று வரும் பாலர் பட்டியல் தீவிர திருத்த பணிகள் குறித்து பொதுமக்கள் கவனத்துடன் இருந்து தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாக்காளர் பட்டியல் சேர்ப்பு படிவத்தினை பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட தேர்தல் நிலை அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என ஈரோடு மாவட்ட ஆட்சியர்ச. கந்தசாமி பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் செய்துள்ளார்.




இதுகுறித்து ஈரோடு ஆட்சியர் ச. கந்தசாமி ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தனது அலுவலக அறையில் செய்தியாளர்களை சந்தித்து தெரிவித்த தகவல்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் 27 10 2025 அன்று வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர் பாக அறிவிப்பு தொடர்பாக அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஈரோடு மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதியில்.,, 4/11/2025 முதல் முத்தம் உள்ள 2222 வாக்கு சாவடி நிலை அலுவலர்களால் இழந்தோறும் சென்றுஉரியவழிகாட்டுதலுடன் கணக்கெடுப்பு கணக்கெடுப்பு படிவங்கள் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது கணக்கெடுப்பு படிவம் வழங்கப்பட்டுள்ளது. வாக்காளர்களிடம் வாக்கு சாவடி நிலை அலுவலர்கள்,73.61 சதவிகிதம் கணக்கெடுப்பு செய்யப்பட்டு அதன் விவரங்கள் பி எல் ஓ ஆப் செயலி பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. கணக்கெடுப்பு படிவம் பெற்று இதுவரை சமர்ப்பிக்காத வாக்காளர்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர்கள் விடுபடாத இருப்பதை உறுதி செய்ய, வாக்காளர்கள் அனைவரும் தங்களுக்கு வழங்கப்பட்ட கணக்கெடுப்பு படிவங்களை பூர்த்தி செய்து பி எல் ஓ அல்லது பி எல் ஏ.2 ஆகியோரிடம்30/11/2025 தேதிக்குள் சமர்ப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பாக ஈரோடு மாவட்டம் ஆட்சியர் அலுவலகம் அலுவலகம் மற்றும் அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர் உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது. கணக்கெடுப்பு படிவங்களை அடுத்த மாதம் டிசம்பர் நாலாம் தேதி இறுதி நாள். நவம்பர் 30ஆம் தேதிக்குள் படிவங்கள் திரும்பப்பெறும் பணியை முடிக்க உள்ளது.

இந்த கணக்கெடுப்ப படிவங்களை பூர்த்தி செய்து தங்களது புதிய புகைப்படத்தை ஒட்டி கொடுக்கப்பட வேண்டும் கொடுக்கப்பட வேண்டும். வர இருக்கின்ற 2025 டிசம்பர் 9ஆம் தேதி வரக்கூடிய வாக்காளர் விரைவு பட்டியலில் வரைவு பட்டியலில் தங்கள் பெற்றஇடம்பெறசெய்யப்படும். வரைவு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்து பிப்ரவரி 7 இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். என தெரிவித்தார்.

மேலும் இப்படிவத்தை பூர்த்தி செய்வதில் சந்தேகங்கள் இருப்பினும் இந்திய தேர்தல் ஆணையத்தின் வழங்கப்பட்டுள்ள தொடர்புடைய வாக்கு சாவடி நிலைய அலுவலரின் தொலைபேசி எண்ணின் தொடர்பு கொண்டு அல்லது மாவட்ட உதவி மையத் தொகுதி வாரியாக பின்வரும் உதவி மையம் வடிவங்களை தங்களது படிவங்களை முழுமையாக பூர்த்தி செய்து பி எல் ஓ அல்லது பி எல் ஏ 2 ஆகியோரிடம் சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படு கிறார்கள்.

மாவட்ட இலவச தொடர்பு மையம். என். 1950.

# ஆழ்கடல் தொழிலுக்குச் சென்ற நாகை மீனவர்கள் மல்லிப்பட்டினத்தில் கரை திரும்பினர்!

நாகை: நவ.29–

வங்கக் கடலில் புயல் உருவாகியுள்ளதால் மீனவர்கள் கரை திரும்ப மீன்வளத்துறை அறிவுறுத்தியிருந்தது. நாகையில் புயல் அறிவிப்புக்கு முன்னதாக ஆழ்கடல் தொழிலுக்குச் சென்ற பெரும்பாலான விசைப் படகுகள் கரை திரும்பியுள்ள நிலையில், அக்கரைப்பேட்டை மீனவ கிராமத்தைச் சேர்ந்த எழிலரசன் என்பவருக்கு சொந்தமான 2 விசைப் படகுகள் மற்றும் அதில் உள்ள சுமார் 20க்கும் மேற்பட்ட மீனவர்கள் இதுவரை கரை திரும்பவில்லை என மாவட்ட மீன்வளத்துறை தகவல் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் நாகை மீனவர்கள் மல்லிப்பட்டினத்தில் கரை திரும்பினர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆழ் கடலில் கடுமையான கடல் சீற்றம் காணப்படுவதால் மீனவர்கள் திசை மாறி சென்று இருப்பதாக மீன்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். டிட்வா புயல் காரணமாக நாகையில் கடல், கடும் சீற்றத்துடன் காணப்படுகிறது.

வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள டிட்வா புயல் கடந்த 6 மணி நேரத்தில் மணிக்கு 7 கி.மீ வேகத்தில் வடக்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து வருகிறது. மணிக்கு 10 கி.மீ வேகத்தில் நகர்ந்த டிட்வா புயலின் வேகம் சற்று குறைந்துள்ளது. சென்னைக்கு 540 கி.மீ தூரத்தில் தெற்கு திசையில் டிட்வா புயல் மையம் கொண்டுள்ளது.



திண்டுக்கல் மாவ்டம், நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மலையகவுண்டன்பட்டியில் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட கணக்கெடுப்பு படிவங்களை வாக்காளர்களிமிருந்து பூர்த்தி செய்து மீள பெறப்படும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன், பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சுகுமாறன், நிலக்கோட்டை வட்டாட்சியர் ஜெயபிரகாஷ், நிலக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.

# மகளை பாலியல் பலாத்காரம் செய்த தந்தைக்கு 17 ஆண்டுகள் சிறைத் தண்டனை திருவள்ளூர் போக்சோ நீதிமன்றம் தீர்ப்பு

திருவள்ளூர் நவ 29 : சென்னை புது வண்ணாரப்பேட்டை ஜீவா நகர் பகுதியைச் சேர்ந்தவர் சுரேஷ்குமார். இவர் சென்னை பெரம்பூரில் உள்ள ரயில்வே ஐசிஎப்ல் வேலை செய்து வருகிறார். இவரது மனைவி சந்தியா. இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளன.சுரேஷ் குமாருக்கு பல பெண்களுடன் தொடர்பு இருந்து வந்துள்ளது. இதனால் கணவன் மனைவிக்கு இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.

இதனால் மனைவியிடம் விவாகரத்து கேட்டு தொந்தரவு செய்து வந்ததாகவும் கூறப்படுகிறது. மனைவி விவாகரத்து கொடுக்க சம்மதிக்காததால் ஏழாம் வகுப்பு படித்து வந்த தனது மகளிடம் தந்தை சுரேஷ்குமார் பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார். இதையடுத்து மனைவி சந்தியா திருவொற்றியூர் மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் கணவர் சுரேஷ் குமாரை போலீசார் கைது செய்தனர். இந்த வழக்கு திருவள்ளூர் மாவட்ட போக்சோ நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் அரசு தரப்பில் விஜயலஷ்மி ஆஜராகி வாதாடினார். விசாரணையைத் தொடர்ந்து நேற்று நீதிபதி உமா மகேஸ்வரி தீர்ப்பு வழங்கினார்.

12 வயதுடைய தன்னுடைய மகளை பாலியல் பலாத்காரம் செய்த வழக்கில் தந்தை சுரேஷ்குமாருக்கு 17 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் 25 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார். மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ.3 லட்சம் அரசு நிவாரணம் வழங்கிடவும் பரிந்துரை செய்தார். தீர்ப்புக்குப்பின் சுரேஷ்குமார் புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

# “டிட்வா” புயல் காரணமாக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் புகார்களை தெரிவிக்கலாம்

“டிட்வா” புயல் காரணமாக திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு கனமழைக்கான “ஆரஞ்சு அலெர்ட்” விடுக்கப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் அனைவரும் பாதுகாப்பாக இருக்குமாறும், காவிரி கரையோர கிராமங்களில் உள்ள மக்கள் மற்றும் சலவைத்தொழிலாளர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது. புயல், மழை காலங்களின்போது பொதுமக்களை தங்க வைக்க ஏதுவாக 154 பாதுகாப்பான மையங்கள் தயார் நிலையில் உள்ளன.

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் 24ஜ7 மாவட்ட அவசர கட்டுப்பாட்டு அறை செயல்பாட்டில் உள்ளது. இக்கட்டுப்பாட்டு அறையின் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கோ அல்லது 04312418995 என்ற எண்ணிற்கோ புயல், மழை, வெள்ளம் தொடர்பான புகார்களை பொதுமக்கள் தெரிவிக்கலாம். மேலும் வட்டாட்சியர் அலுவலகங்களில் செயல்படும் பின்வரும் கட்டுப்பாட்டு அறைகளுக்கோ, அல்லது வட்டாட்சியர்களின் அலைபேசி எண்ணிற்கோ பொதுமக்கள் புகார்களை தெரிவிக்கலாம்.

திருச்சி கிழக்கு–0431 2711602, 9445461808, திருச்சி மேற்கு–0431 2410410, 9445000602,

திருவெறும்பூர் – 0431 2555542,7825873784, ஸ்ரீரங்கம்–0431 2230871, 9445000603,

மணப்பாறை – 04332 260576,9445000604, மருங்காபுரி–04332 299381, 9445461805 இலால்குடி–0431 2541233,9445000605, மண்ணச்சநல்லூர்– 0431 2561791, 9445000606, முசிறி–04326 260226, 9445000607, துறையூர்–04327 222393, 9445000609, தொட்டியம்–04326 254409,9445000608.

புயல், மழையின்போது ஆறு, குளம் உள்ளிட்ட நீர் நிலைகளில் குழந்தைகளை செல்லாத வண்ணம் கவனமாக இருக்குமாறு பெற்றோர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வானிலை தொடர்பான தகவல்களை“TN-Alert APP” ” மற்றும் “SACHET APP” ஆகியவற்றின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன், தெரிவித்துள்ளார்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...



ஈரோடு மாநகராட்சி அன்னை சத்யா நகரில், தமிழ்நாடு அரசின் சாதனைகள் குறித்த புகைப்பட கண்காட்சி செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில், அமைக்கப்பட்டுள்ளது. அதனை அப்பகுதிப்பது மக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

# அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம், கே.என்.புதூர் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மலைவாழ் மக்களின் பயன்பாட்டிற்கான புதிய 108 ஆம்புலன்ஸ் சேவையினைத் தொடங்கி வைத்தார்



சேலம், நவ.29–

சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா. இராஜேந்திரன் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம், கே.என்.புதூர் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மலைவாழ் மக்களின் பயன்பாட்டிற்கான புதிய 108 ஆம்புலன்ஸ் சேவையினை (28.11.2025) தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் அவர்கள் பேசியதாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வியும், மருத்துவமும் இரு கண்களாக பாவித்து பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் பொது மக்களுக்கு தேவையான அனைத்து விதமான மருத்துவ சேவைகளும் விரைந்து கிடைத்திடும் வகையில் மக்களைத்தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம், வருமுன் காப்போம் நம்மை காக்கும் 48 உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதேபோன்று மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடும் வகையில் நிதி ஒதுக்கீடு செய்து புதிய கட்டிடங்களையும் கட்டிக் கொடுத்து வருகிறார்கள்.

பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று இன்றைய தினம், சேலம் மாவட்டம் காடையாம் பட்டி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட கே.என்.புதூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய 108 ஆம்புலன்ஸ் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட பூமரத்தூர், கே.என்.புதூர், கொங்கர பட்டி, தாட்ராவூர், கே.மோரூர், பெரிய வடகம்பட்டி உள்ளிட்ட 6 துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் கே.என்.புதூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 32 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர்.

குறிப்பாக, பூமரத்தூர் துணை சுகாதார நிலையமானது மலைவாழ் மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியாகும். இப்பகுதியில் மொத்தம் 3,000 க்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் வசித்து வருகின்றனர். மலைவாழ் மக்களுக்கு தேவையான மருத்துவ வசதிகளை உடனுக்குடன் கிடைத்திடும் வகையில் இந்த ஆம்புலன்ஸ் சேவையானது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று கர்ப்பிணி தாய்மார்கள், பாம்பு, தேள் கடி, தேன் ஈ, காட்டுகுளவி உள்ளிட்ட விஷப்பூச்சிகளினால் பாதிப்புகள் ஏற்படும் போது அவர்களை விரைந்து உயர் மருத்துவமனைகளுக்கு அழைத்துச் சென்று மருத்துவ உதவிகள் வழங்கிடும் நோக்கத்தோடு இந்த சேவையானது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா. இராஜேந்திரன் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர். சாது பக்தசிங், மருத்துவர் ஜெயக்குமார், செவிலியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அர்ப்பணிப்பு உணர்வுடன் சேவையாற்றுபவர்கள் செவிலியர்கள்: ஆரணி எம்பி புகழாரம்




வந்தவாசி, நவ 29

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஆசியன் இன்ஸ்டிடியூட் மையத்தின் 19 ஆவது பட்டமளிப்பு விழா சேத்பட் ரோட்டில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு முகமது இஸ்மாயில் நினைவு அறக்கட்டளை நிறுவனர் டி.எம். பீர்முகம்மது தலைமை தாங்கினார். அகாடமி நிறுவனர் பீ.ரகமத்துல்லா வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, ஆரணி எம்பி எம்.எஸ். தரணி வேந்தன் பங்கேற்று, பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு பட்டயச்சான்றிதழ்களை வழங்கினார். மேலும் செவிலியர் பயிற்சி பெற்ற நீங்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் சேவை புரிய உள்ளீர்கள். எனவே உங்கள் சேவை இன்றைய சூழலில் அனைவருக்கும் தேவைப்படும் நிலையில் உள்ளது. மருத்துவர்களை காட்டிலும் செவிலித்தாய் என்று அழைப்பது உங்களுக்கான அங்கீகாரம் என்று பாராட்டினார். மேலும் பல்திறன் செயல்பாட்டு மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ஓய்வுபெற்ற மாவட்ட மருத்துவ இணை இயக்குநர் டாக்டர் எஸ். குமார், டாக்டர் எஸ். சுதாகரன், டாக்டர் கே.செல்வ முத்து குமாரசாமி, டாக்டர் ஆர்.முனுலட்சுமி, டாக்டர் கோகுலகிருஷ்ணன், டாக்டர் ஆர்.ஹாரூன் ரஷூத் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர்.

இந்த நிகழ்ச்சியில் நகர செயலாளர் தயாளன், நகர் மன்ற துணைத் தலைவர் அன்னை சீனிவாசன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள், பெற்றோர்கள் பலரும் பங்கேற்றனர். ஆசிரியைகள் ஜாய் ஜான்சிராணி, சுருதி, ஜெநசீர் பானு, சரண்யா ஆகியோர் நிகழ்வை தொகுத்து வழங்கினர். இறுதியில் அகாடமி தாளாளர் ஆசியா பர்வீன் நன்றி கூறினார்.

# திருவள்ளூரில் வாணிப கழக அங்கீகார தேர்தலை முன்னிட்டு முதல் ஆலோசனைக் கூட்டம் மற்றும் மாற்று சங்கத்தினர் அண்ணா தொழிற்சங்கத்தில் இணையும் நிகழ்ச்சி



திருவள்ளூர் நவ 29 :

வருகிற 10 ஆம் தேதி நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு நடைபெற இருக்கின்ற அங்கீகார தேர்தலை முன்னிட்டு முதல் ஆலோசனைக் கூட்டம் மற்றும் மாற்று சங்கத்தினர் அண்ணா தொழிற்சங்கத்தில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது. திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி.வி.ரமணா தலைமையில் திருவள்ளூரில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு மாநில செயலாளர் சிவன் முன்னிலை வகித்தார். இதில் மாநில இணை செயலாளர் தமிழ்செல்வன், மண்டல தலைவர் அரசு, மண்டல செயலாளர் ராஜ்குமார், மண்டல பொருளாளர் ஆனந்தன் ஆகியோர் வரவேற்றனர்.

இதில் அண்ணா தொழிற்சங்க மாநில செயலாளர் கமலக்கண்ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாற்று சங்கத்தில் இருந்து அண்ணா தொழிற்சங்கத்தில் இணைந்தவர்களை சால்வை அணிவித்து வரவேற்றார்.

அப்போது பேசிய அவர், நடைபெற உள்ள தேர்தலில் 51 சதவீத வாக்குகள் பெற்றால் வெற்றி பெற்றதாக அறிவித்து அங்கீகாரம் வழங்கப்படும் என்பதால் மொத்தமுள்ள 14 ஆயிரத்து 754 வாக்காளர்களில் குறைந்தபட்சம் 10,000 வாக்குகளையாவது நான் பெற வேண்டும் என்றும், இந்த வீடியா திமுக அரசு எல்லா விதத்திலும் தோல்வி அடைந்த அரசாங்கமாக காணப்படுகிறது. தொழிலாளர்களுக்கு எதையும் செய்யவில்லை.

புரட்சித்தலைவர் எம்ஜிஆர் புரட்சித்தலைவி அம்மா ஆட்சிக்காலத்தில் 4500 பருவ கால பணியாளர்களை பணி நிரந்தரம் செய்திருக்கிறோம். அதுமட்டுமின்றி 4500 பருவகால பணியாளர்களையும் நியமித்திருக்கிறோம். ஆனால் இந்த திமுக அரசில் 302 பேரை மட்டுமே பணி நியமனம் செய்திருப்பதாகவும், இதனால் அண்ணா தொழிற்சங்கம் சார்பில் 60 முதல் 70 சதவீதம் வாக்குகள் பெற வாய்ப்பு இருக்கிறது. இதனால் முதன்மை தொழிற்சங்கமாக அண்ணா தொழிற்சங்கம் நிச்சயமாக வெற்றி பெறும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

திமுக ஆட்சியில் போக்குவரத்து துறையை தனியாருக்கு தடை வார்ப்பது, டாஸ்மாக் நிறுவனத்தில் வேலை பளு, பணியிடை நீக்கம், பணியிட மாறுதல் செய்வது போன்ற பல்வேறு இன்னல்களுக்கு தொழிலாளர்கள் ஆளாகின்றனர். அதே போல் நுகர்பொருள் வாணிப கழகத்தில் பருவகால தொழிலாளர்களை பழிவாங்கும் செயலிலும் ஈடுபடுகின்றனர். எனவே 2026 ல் மீண்டும் அம்மா ஆட்சி எடப்பாடி யார் தலைமையில் அமையும் போது இந்த தொழிலாளர்களுக்கு அண்ணா தொழிற்சங்கம் பாதுகாப்பாக இருக்கும் என தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் திருவள்ளூர் நகர அதிமுக செயலாளர் ஜி.கந்தசாமி, மாவட்ட மாணவரணி செயலாளர் பி.வி.பாலாஜி, மாவட்ட அம்மா பேரவை செயலாளர் கே.பி.எம். எழிலரசன், மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி தலைவர் எஸ் ஏ.நேசன் நகர அம்மா பேரவை தலைவர் ஜோதி மற்றும் தொழிற்சங்க நிர்வாகிகள் ஜெயகாந்தன் மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள்குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

# ரோடு ஷோக்களுக்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கக் கோரிய வழக்கில் தீர்ப்பு தேதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பு

சென்னை: நவ.29–

அரசியல் கட்சிகள் அளித்துள்ள பரிந்துரைகள் பரிசீலிக்கப்படும் என தமிழ்நாடு அரசு ஐகோர்ட்டில் பதில் அளித்துள்ளது. ரோடு ஷோக்களுக்கான வழிகாட்டு நெறி முறைகளை வகுக்கக் கோரிய வழக்கில் தீர்ப்பு தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அரசியல் கட்சிகளின் கூட்டங்கள், ரோடு ஷோக்களுக்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கக் கோரிய வழக்கு தொடரப்பட்டது. அதிமுக, தவெக மற்றும் தேசிய மக்கள் சக்தி கட்சி சார்பில் பரிந்துரைகள் ஐகோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டன.

# சேலம் வழியே மின்னல் வேகத்தில் சென்றது ஜோலார்பேட்டை கோவை மார்க்கத்தில் 145 கி.மீ. வேகத்தில் ரயில் இயக்கி சோதனை

## *வெற்றிகரமாக நடந்ததாக அதிகாரிகள் அறிவிப்பு

சேலம் : நவ.29–

ஜோலார்பேட்டை கோவை மார்க்கத்தில் 145 கி.மீ. வேகத்தில் ரயிலை இயக்கி சோதனை செய்தனர். இந்த அதிவேக சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடந்ததாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர். சென்னை கோவை மார்க்கத்தில் 130 கி.மீ. வேகத்தில் ரயில்களை இயக்க தண்டவாள கட்டமைப்புகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இதில், முதல்கட்டமாக சென்னை ஜோலார்பேட்டை இடையே 130 கி.மீ. வேகத்திற்கான தண்டவாள மேம்பாட்டு பணிகளை முடித்து, அதனை பயன்பாட்டிற்கு கொண்டு வந்தனர்.

2ம் கட்டமாக ஜோலார்பேட்டை கோவை இடையே 286 கிலோ மீட்டர் தூரத்திற்கு தண்டவாளத்தை மேம்படுத்தும் பணி கடந்த 2 ஆண்டுகளாக நடந்தது. அப்பணிதற்போதுநிறைவடைந்ததையடுத்து, அதிவேக ரயில் சோதனை ஓட்டத்தை தெற்கு ரயில்வே அதிகாரிகள் நடத்தி வருகின்றனர்.

இந்தவகையில் கடந்த 15ம் தேதி கோவை ஜோலார்பேட்டை இடையே அதிவேக ரயிலை இயக்கி சோதித்தனர். அப்போது அதிகபட்சமாக 140 கி.மீ., வேகத்தில் ரயில் இயக்கி பார்க்கப்பட்டது. இதன் அடுத்தக்கட்டமாக ஜோலார்பேட்டை கோவை இடையே நேற்று அதிவேக ரயில் சோதனை ஓட்டத்தை தெற்கு ரயில்வே அதிகாரிகள் நடத்தினர்.

இதற்கான சிறப்பு ரயில் (இன்ஜினுடன் 2பெட்டிகள்), சென்னை சென்ட்ரலில் இருந்துஜோலார்பேட்டைக்குவந்தது.பிறகு முற்பகலில் ஜோலார்பேட்டையில் இருந்து திருப்பத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் வழியே கோவைக்கு அதிவேகமாக இயக்கி பார்க்கப்பட்டது.

பிற்பகலில் கோவையில் இருந்து ஜோலார்பேட்டைக்கு இயக்கி பார்த்தனர். இந்த அதிவேக சோதனை ஓட்டத்தில் மிக அதிகபட்சமாக 145 கிலோ மீட்டர் வேகத்தில் ரயிலை இயக்கினர். அந்த வேகத்தில்செல்லும்போதுதண்டவாளத்தின் ஸ்திரத்தன்மை பரிசோதிக்கப்பட்டது.

வளைவுகளில் திரும்பும் வேகம், யார்டு, பாயிண்ட் பகுதியில் செல்லும் வேக திறன் போன்ற அனைத்து அசைவுகளையும் பதிவு செய்துகொண்டனர். இந்த அதிவேக சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடந்ததாகவும், அதுவும் 145 கி.மீ., வேகத்தில் ரயிலை இயக்கி பார்த்து தண்டவாள திறன் சோதிக்கப்பட்டதாகவும் தெற்கு ரயில்வே அதிகாரிகள் அறிவித்தனர்.

இச்சோதனை ஓட்டம்மூலம்இனிமேல் சென்னை சென்ட்ரல்கோவை மார்க்கத்தில் 130 கி.மீ., வேகத்தில் ரயில்களை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது ரயில்வே பாதுகாப்பு ஆணையரின் சோதனைக்கு பிறகு உரிய அனுமதி பெறப்பட்டு, 130 கி.மீ., வேகத்தில் ரயில்கள் இயக்கம் நடைமுறைக்கு வரும்.

இதன்மூலம் விரைந்த போக்குவரத்தை பயணிகள் பெறுவார்கள். அதுவும் தமிழ்நாட்டின் முக்கிய வழித்தடங்களின் ஒன்றான சென்னைகோவை வழித்தடம் மேம்பாடு பெற்றிருப்பது ரயில் பயணிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# வெள்ளாறு பாலத்தின் தடுப்புக் கட்டையில் பஸ் மோதி விபத்து: 18 ஐயப்ப பக்தர்கள் படுகாயம்

சிதம்பரம்: நவ.29–

சிதம்பரம் அருகே பாலத்தின் தடுப்பு கட்டையில் பஸ் மோதிய விபத்தில் 18 ஐயப்ப பக்தர்கள் படுகாயம் அடைந்தனர். அவர்களை தீயணைப்பு படையினர் போராடி மீட்டனர். திருவண்ணாமலை மாவட்டம் சேத்பட் அருகே உள்ள கண்ணனூர் கிராமத்தில் இருந்து ஐயப்ப பக்தர்கள் 40க்கும் மேற்பட்டோர் ஒரு பஸ்சில் ஐயப்பன் கோயிலுக்கு புறப்பட்டு சென்றனர். இந்த பஸ்சை டிரைவர் ராஜேஷ் ஓட்டி வந்தார். கடலூர் மாவட்டம் சிதம்பரம் பு.முட்லூர் வெள்ளாற்று பாலத்தின் அருகே இன்று காலை சென்றபோது திடீரென கட்டுப்பாட்டை இழந்த பஸ் வெள்ளாற்று பாலம் துவங்கும் சாலை ஓரத்தில் இருந்த தடுப்புக் கட்டையில் மோதி விபத்துக்குள்ளானது.

பின்னர் மோதிய வேகத்தில் பஸ்சின் முன்பக்க அச்சு முறிந்ததால் பஸ் கட்டையிலேயே இழுத்துச் சென்று அந்தரத்தில் தொங்கியபடி நின்றது. இதனால் பஸ்சில் பயணம் செய்த ஐயப்ப பக்தர்கள் அலறி துடித்தனர். இந்த விபத்தில் 18 பேர் படுகாயமடைந்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த சிதம்பரம் தீயணைப்புத் துறையினர் மற்றும் பரங்கிப்பேட்டை போலீசார் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்தனர். பின்னர் காயமடைந்த பக்தர்களை மீட்டு சிகிச்சைக்காக சிதம்பரத்தில் உள்ள மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் பக்கவாட்டு கட்டையில் சிக்கிய பஸ்சை கிரேன் மூலம் மீட்டனர். இந்த விபத்து குறித்து போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நள்ளிரவில் கிராவல் மண் அள்ளிய டிப்பர்லாரி பறிமுதல் மற்றும் இருவர் கைது.



திருச்சி, நவ.29–

திருச்சி மாவட்டம் மணப்பாறை அடுத்த புத்தாநத்தம் பகுதிகளில் தொடர்ந்து இரவு நேரங்களில் கிராவல் மண் அள்ளுவதாக திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு தொடர்ந்து புகார்கள் வந்ததன் அடிப்படையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனிப்படை அமைத்து இரவு ரோந்து பணியில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் புத்தாநத்தம் அடுத்த மெய்யம்பட்டி குளத்தில் கிராவல் மண் அள்ளுவதாக கிடைத்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற தனிப்படை போலீசார் சின்ன கோன் பட்டி முத்தாலம்மன் கோவில் அருகே கிராவல் மண் ஏற்றி வந்த லாரியை பிடித்து விசாரணை செய்தனர்.

விசாரணையில் கிராவல் மண் எடுத்துச் சென்ற டிப்பர் லாரி உரிமையாளர் ரஞ்சித் (27) மற்றும் டிப்பர்லாரி டிரைவர்பிரகாஷ் (28) ஆகிய இருவரையும் பிடித்து விசாரணை செய்தனர்.

இருவரிடம் விசாரணை மேற்கொண்டதில் மெய்யம் பட்டி குளத்தில் கிராவல் மண் அள்ளியதாக ஒப்புக்கொண்டதன் பேரில் டிப்பர்லாரி மற்றும் இருவரையும் புத்தாநத்தம் காவல் நிலையம் அழைத்து வந்து அவர்கள் மீது வழக்கு பதிவு செய்து லாரியை பறிமுதல் செய்தனர் மேலும் கடத்தலில் ஈடுபட்ட வாகனத்தின் உரிமையாளர் மற்றும் டிரைவர் ஆகியோரை புத்தாநத்தம் போலீசார் கைது செய்து மேலும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# செஞ்சியில் ஊழல் தடுப்பு பவுண்டேஷன் ஆப் இந்தியா சார்பில் இந்திய அரசியலமைப்பு தின விழா




செஞ்சி நவ 29

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி திருவண்ணாமலை சாலையில் ஊழல் தடுப்பு பவுண்டேஷன் ஆப் இந்தியா அமைப்பு சார்பில் இந்திய அரசியலமைப்பு தின விழா நடைபெற்றது.

இதில் ஊழல் தடுப்பு பவுண்டேஷன் ஆப் இந்தியா அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் லூர்து சேவியோ தலைமை தாங்கினார்

ஸ்ரீ ரங்க பூபதி கல்வி குழும நிறுவனரும் காங்கிரஸ் கமிட்டி மாநில துணைத் தலைவர் வழக்கறிஞர் ரங்கபூபதி கீழ் வைலாமூர் முன்னாள் தலைவர் அந்தோணி மேரி சிறப்புரையாற்றினர்.

நிகழ்ச்சியில் மஸ்கட் வெங்கடேசன் ஆலம்பூண்டி ரமேஷ் ஏடி பாரதி வழக்கறிஞர் ராஜு வளர்ச்சி விஜயலட்சுமி ஞானமணி குமாரசாமி ராஜன் அப்போலின் தாஸ். ஐந்துலட்சம்,செல்வம் சுமித்ரா முத்துலட்சுமி ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர். மூர்த்தி நாகராஜன் பாஸ்கரன் அந்தோணிசாமி மணி செம்மண சுநாதன் வடமலை பூங்காவனம் மணிவேல் ஆசை மல்லி ராஜமுத்து அஜித்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்



நாமக்கல் மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் –2026 கணக்கீட்டு படிவம் பெறும் பணி நடைபெற்று வருகிறது.

# காட்சி பொருளாக நிற்கும் மாநகராட்சி புதிய கட்டிடங்கள்.. பல கோடி ரூபாய் மதிப்பில் கட்டியும் பலன் இல்லை..

## மண்டல குழு தலைவர் குறிஞ்சி தண்டபாணியின் பேச்சால் பரபரப்பு..



ஈரோடு. நவ. 29

ஈரோடு மாநகராட்சியின் மாதாந்திர சாதாரண கூட்டம் நேற்று நடைபெற்ற நிலையில், மண்டல குழு, மாமன்ற உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சனைகளை கிளப்பி நிர்வாகத்தின் மீது குற்றம் சாட்டி பேசினர்.

ஈரோடு மாநகராட்சியின் மாதாந்திர மாமன்ற கூட்டம் நேற்று நடைபெற்றது. மேயர் நாகரத்தினம் தலைமை வகித்தார். துணை மேயர் செல்வராஜ், ஆணையாளர் அரபித் ஜெயின் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வழக்கம்போல் திருக்குறள் கூறி மேயர் நாகரிகம் கூட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

நேற்றைய கூட்டத்தில் முதல் நபராக 43 வது வார்டு மாம் என்ற உறுப்பினர் சபு ராமா சாதிக் பாட்சா பேசினார்..

அவர் பேசும்போது மறைந்த மாமன்ற உறுப்பினர் செந்தில்குமாருக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தீர்மானத்தில் ஒரு வரி அவருக்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானமும் கொண்டு வந்து இருக்கலாம். நடப்பு மாநகராட்சியில் அவர் மாமன்ற உறுப்பினராக இருந்து வந்த நிலையில் மரணம் அடைந்துள்ளார். அவருக்கு முன்னதாக தீர்மானத்தில் ஒரு இரங்கல் தீர்மானம் கொண்டு வந்து இருக்கலாம்.

மறைந்த எங்கள் தலைவர் இ வி கே எஸ் இளங்கோவன் மற்றும் மறைந்த திருமகன் ஈவேரா ஆகியோருக்கு தீர்மானம் கொண்டுவரப்பட்டு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. அந்த நடைமுறை நடப்பு மாநகராட்சியில் மாமன்றம் உறுப்பினராக இருந்த ஒருவருக்கு ஏன் வழங்கப்படவில்லை என்று கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து பல ஆடைகளை சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து பேசினார்.

குறிப்பாக கூடுதல் வரிவிதிப்பை ரத்து செய்யக் கோரியும், குப்பை வரியை முழுமையாக நீக்க கோரியும், மற்றும் சாலை மற்றும் சாக்கடை வசதிகளை மேம் படுத்தி தரக் கூறியும் பேசினார்கள்.

குப்பைகளை அல்லும் வாகனங்கள், ஜேசிபி இயந்திரங்கள் முறையாக பயன்படுத்தவில்லை என்றும், அவைகள் சட்ட விதிகளுக்கு உட்பட்டு வட்டாரப் போக்கு வரத்து அலுவலகங்களில் முறையாக எப்சி காட்டப்படாமல் இருப்பதையும் கண்டித்து பேசினார்.

ஊராட்சி கோட்டை குடிநீர் திட்டம் தொடங்கப்பட்டு பல வருடங்கள் ஆகிய, அவைகள் இன்னும் பல பகுதிகளுக்கு சென்றடையவில்லை என்றும், அவர்களை முறைப்படுத்தி ஊராட்சி கோட்டை கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கிட வேண்டுமென்றும் மாமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை முன்வைத்து பேசினர்.

நேற்று நடைபெற்ற மாநகராட்சி கூட்டத்தில் வழக்கம் போல் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து பேசிய மாநகராட்சி அதிமுக எதிர்க்கட்சித் தலைவர் தங்கமுத்து, கூடுதல் வரி குறைப்பு உள்ளிட்ட எங்களது கோரிக்கைகள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதை கண்டித்து நாங்கள் வெளிநடப்பு செய்வதாக கூறிவிட்டு, அதிமுக மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கூட்டத்தை புறக்கணித்து வழி நடப்பு செய்தனர்.

அதன் பிறகு பேசிய நான்காவது மண்டல குழு தலைவர் குறிஞ்சி தண்டபாணி பல்வேறு விஷயங்களை முன் வைத்து காரசாரமாக ஆணையாளர் மற்றும் அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

குறிப்பாக மாநகராட்சியின் கோடிக்கணக்கான பணத்தை முதலீடு செய்து, ஈரோடு காளை மாட்டு சிலை அருகில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் மற்றும் இதுபோன்று சில இடங்களில் மாநகராட்சியின் பணத்தைக் கொண்டு கட்டப்பட்ட கட்டிடங்கள் அனைத்தும், வெறும் காட்சி பொருளாக மட்டுமே நின்று கொண்டிருக்கின்றது.

அந்தக் கட்டிடங்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கோ அல்லது வாடகைக்கோ விடப்படாமல் இருப்பது மாநகராட்சிக்கு மிகப்பெரிய பொருளாதார இழப்பை ஏற்படுத்தி வருகிறது.

அதேபோல் பல இடங்களில் மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் கடை வைத்து நடத்தி வரும் வியாபாரிகள் தகுந்த முறையான வியாபாரம் இல்லை என கோரி அந்த கடைகளை காலி செய்து வருவதும், மாநகராட்சிக்கு கூடுதல் இழப்புதான்.

ஈரோடு மாநகராட்சி நிர்வாகம் இவ்வாறு பொறுப்பற்ற முறையில் இருந்து வருவது மாநகராட்சிக்கு மிகப்பெரிய இழப்பு. என்று மண்டல குழு தலைவர் குறிஞ்சி தண்டபாணி காரசாரமாக பேசினார்.

பின்னர் பேசிய, 1,வது மண்டல குழு தலைவர் பி. கே . பழனிசாமி பேசுகையில்...

மறைந்த இந்த மாமன்றத்தின் உறுப்பினர் செந்தில்குமார் மற்றும் ஈரோடு தமிழன்பன் உள்ளிட்டவர் மறைவிற்கு இரங்கல் தீர்மானம் கொண்டு வந்து பேசினார்.

மேலும் 24வது வார்டு பகுதிகளில் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் மூலம் அமைக்கப்பட்டுள்ள வால்வுகள் உடைந்தும், அப்பகுதியில் சாலைகள் சேதமடைந்தும் உள்ளது இதனால் பொதுமக்கள், கோவிலுக்கு வரும் பக்தர்கள் மிகுந்த பாதிப்படைகின்றனர். மாநகராட்சி நிர்வாகம் இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து பேசினார்.

ஆதாரங்களை கையில் வைத்து காண்பித்து ஆவேசமாக பி. கே பழனிசாமி பேசியதால் கூட்டத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மண்டல குழு தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் குற்றச்சாட்டுகளை கோரிக்கைகளை விரைவில் சரி செய்து வைப்பதாக, ஆணையாளர் மற்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று நடைபெற்ற ஈரோடு மாநகராட்சி கூட்டத்தில் உதவி ஆணையாளர் தனலட்சுமி, மாநகரப் பொறியாளர் கே. முருகேசன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருவள்ளூரில் ஆண்களுக்கான நவீன குடும்பநல நிரந்தர கருத்தடை சிகிச்சை தொடர்பான விழிப்புணர்வு இரத பேரணி

## மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் கொடியசைத்து துவக்கி வைத்தார் :



திருவள்ளூர் நவ 29 :

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் கீழ் செயல்படும் மாவட்ட குடுப்நலச்செயலகம் சார்பில் ஆண்களுக்கான நவீன குடும்பநல நிரந்தர கருத்தடை சிகிச்சை தொடர்பான விழிப்புணர்வு இரத பேரணியை மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் ஆண்களுக்கான நவீன வாசக்டமி சிறப்பு முகாம்கள் 2025 நவம்பர் 21 முதல் 2025 டிசம்பர் 04 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. ஆண்களும் குடும்ப நலத்தில் பங்கேற்கும் பொருட்டு ஆண்களுக்கான நவீன குடும்பநல அறுவை சிகிச்சை முகாம்கள் நடத்த அரசால் இருவார விழிப்புணர்வு விழா ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது. மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் பொதுமக்களுக்கு குடும்பநல துறையின் மூலம் தகவல் வழங்கப்பட்டு வருகிறது.

திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை குறிப்பிட்ட அரசு மருத்துவமனைகள் மற்றும் வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறப்பு குடும்ப நல ஆண் கருத்தடை முகாம்கள் நடத்திட மாவட்ட நிர்வாகம் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது .இம்முறையின் சிறப்பம்சங்கள்: பெண்களுக்கான குடும்பநல கருத்தடை செய்வதைவிட எளிமையானது மயக்க மருந்து கொடுப்பதில்லை. கத்தியின்றி இரத்தமின்றி செய்யப்படுகிறது. தையல் இல்லாததால் தழும்பு தெரியாது மருத்துவமனையில் தங்க வேண்டிய அவசியமில்லை. சிகிச்சை முடிந்தவுடன் வீட்டிற்கு செல்லலாம். இரண்டு மணி நேரத்திற்கு பின்னர் வழக்கமான பணிகளை மேற்கொள்ளலாம்.

முகாமில் கலந்து கொண்டு குடும்ப நல கருத்தடை முறை ஏற்கும் ஒவ்வொரு பயனாளிக்கும் ஈட்டுத்தொகையாக அரசால் வழங்கப்படும் ரூபாய் 1100 வழங்கப்படும். இச்சிறப்பு முகாமில் குடும்ப நலம் ஏற்கும் ஆண்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கும் ஊக்கத்தொகை ரூ.3900/ சேர்த்து ரூ.5000 வழங்கப்படும். மேலும் ஊக்குவிப்பாளருக்கு ரூ.200 வழங்கப்படும். இதனை தகுதியுள்ள தந்தையர்கள் ஏற்பதன் மூலம் சிறு குடும்ப நெறியை பின்பற்றலாம் என மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்தார்.

இப்பேரணியில், இணை இயக்குநர் (மருத்துவம் ம ஊரக நலப்பணிகள்) அன்பிகா சண்முகம், துணை இயக்குநர் (குடும்ப நலம்) சேகர், துணை இயக்குநர் (காசநோய்கள்) சங்கீதா, மாவட்ட விரிவாக்க அலுவலர் சாந்தி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சொத்து குவிப்பு வழக்கில் இருந்து அமைச்சர் பெரியகருப்பன் விடுதலை: சிவகங்கை நீதிமன்றம் தீர்ப்பு

சிவகங்கை: நவ.29–

சொத்து குவிப்பு வழக்கில் அமைச்சர் கே. ஆர்.பெரியகருப்பன் மற்றும் குடும்பத்தினரை விடுதலை செய்து சிவகங்கை நீதிமன்றம் உத்தரவிட்டது. தமிழக அமைச்சரவையில் கடந்த 2006 முதல் 2011 வரை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராக கே.ஆர்.பெரியகருப்பன் இருந்தார். இவர் அமைச்சராக பணியாற்றிய காலத்தில் வருமானத்திற்கு அதிகமாக ரூ.1.20 கோடி சொத்து சேர்த்ததாக லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார், கடந்த 2012ம் ஆண்டு கே.ஆர்.பெரியகருப்பன், அவரது மனைவி பிரேமா, தாய் கருப்பாயி அம்மாள், மகன் கோகுலகிருஷ்ணன், மைத்துனர் செந்தில்வேல் ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கு சிவகங்கை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. வழக்கு விசாரணையின் போது அமைச்சரின் தாய் கருப்பாயி அம்மாள் இறந்துவிட்டார். இந்த வழக்கில் விசாரணை முடிந்த நிலையில் நேற்று தீர்ப்பு கூறப்பட்டது.

இதையொட்டி அமைச்சர் உள்ளிட்ட அனைவரும் நீதிமன்றத்தில் ஆஜராகினர். வழக்கை விசாரித்த நீதிபதி அறிவொளி, வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாததால் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் உள்ளிட்ட நான்கு பேரையும் விடுதலை செய்து உத்தரவிட்டார்.

# கோயில் சுவர் இடிந்து 3 பேர் சிக்கினர்

கும்பகோணம்: நவ.29–

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகே பட்டீஸ்வரத்தில் உள்ள கோபிநாத பெருமாள் கோயிலில் கடந்த 8 மாதங்களாக திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. தொடர் மழை காரணமாக கோயில் சுற்றுச்சுவரின் ஒரு பகுதி திடீரென உள்வாங்கி, நேற்று இடிந்து அருகில் இருந்த வீட்டின் மீது விழுந்தது. இதில், தமிழ்மணி (60), அவரது மனைவி தாமரைச்செல்வி (57) மற்றும் ஆனந்தகுகன் என்ற 2 வயது குழந்தை இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டனர். அருகில் இருந்தவர்கள் அவர்களை மீட்டனர்.

# கொசஸ்தலை ஆற்றுக்கு 200 கன அடியிலிருந்து 1000 கன அடியாக உபரி நீர் திறப்பு: 30 கிராமங்களுக்கு முதற்கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை

திருவள்ளூர்: நவ.29–

கனமழை எச்சரிக்கை காரணமாக பூண்டி நீர்த்தேக்கத்தில் இருந்து உபரிநீர் திறக்கப்பட்டிருக்கிறது. வங்கக்கடலில் உருவாகியுள்ள டிட்வா புயல் காரணமாக எச்சரிக்கை திருவள்ளூர் மாவட்டத்தில் இரண்டு நாட்கள் கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனால் சென்னை குடிநீர் வழங்கும் முக்கிய ஆதாரமாக உள்ள பூண்டி அணையில், சத்தியமூர்த்தி நீர்தேக்கத்திற்கான நிலவரப்படி 790 கனஅடியானது நீர்வரத்து வந்து கொண்டிருக்கிறது. மேலும் மழை பெய்வதால் நீர்வரத்து அதிகரிக்கும் கூடும் என்பதால் அணை பாதுகாப்பு கருதி நேற்றைய தினம் 200 கன அடி உபரிநீர் கொசஸ் தலை ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது.

நேற்று காலை 8 மணியளவில் 1000 கன அடியாக அதிகரிக்கப்பட்டு 10 மணியளவில் 1,300 கன அடியாக அதிகரித்தது. இதன் காரணமாக 30 கிராமங்களுக்கு முதல் கட்ட வெள்ள எச்சரிக்கையானது விடுக்கப்பட்டது. நந்தனம், தாம்பரம், எண்ணூர் உள்ளிட்ட



கொசஸ்தலை ஆற்றின் கரையோர பகுதிகளில் உள்ள 30 கிராம மக்களுக்கு எச்சரிக்கையானது நீர்வளத்துறை சார்பில் விடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆற்று பகுதியில் இறங்கவோ, குளிக்கவோ, துணிதுவைக்கவோ கூடாது என மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ளனர். தற்போதைய நிலவரப்படி பூண்டி நீர்த்தேக்கத்தில் 3,231 மில்லியன் கன அடியில் இருந்து 2810 மில்லியன் கன அடி நீர் உள்ளது. அதைப்போன்று 35 அடி நீர்மட்ட கொண்ட இந்த நீர்தேக்கத்தில் தற்போது 33.96 அடி உயரத்தில் நீர் இருப்பு உள்ளது.

# அரசு பள்ளி சமையலர் மீது நிகழ்த்தப்பட்ட தீண்டாமை வன்கொடுமை வழக்கில் 6 பேருக்கு தலா 2 ஆண்டு சிறை தண்டனை

திருப்பூர்: நவ.29–

திருப்பூர் மாவட்டம் அவிநாசி அருகே அரசு பள்ளி சமையலர் பாப்பாள் மீது நிகழ்த்தப்பட்ட தீண்டாமை வன்கொடுமை தொடர்பான வழக்கில் பெண் உள்பட ஆறு பேருக்கு தலா 2 ஆண்டு சிறை தண்டனையும், ரூ.5,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. பழனிசாமி, சக்திவேல், சண்முகம், வெள்ளியங்கிரி, துரைசாமி மற்றும் சீதாலட்சுமி ஆகியோருக்கு தலா 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. பட்டியலினத்தைச் சேர்ந்த பாப்பாள் சமையலராக பணியாற்ற விடாமல் தடுத்ததாக 2018ம் ஆண்டு வழக்கு தொடரப்பட்டது. பள்ளியில் சமையலராக பாப்பாள் பணியாற்ற எதிர்ப்பு தெரிவித்து ஆதிக்க சாதியினர் பள்ளிக்கு செல்லவிடாமல் தடுத்தனர்

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421